உ

ஓம் சக்தி



தெல்லிப்பழை,

அருள்மிகு

# துர்க்காதேவி அந்தாதி


இயற்றினர்,

திருப்பாதிரிப்புலியூர், ஸ்ரீமத் ஞானியார் மடாலய

ஐந்தாங்குருநாதர்

**ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர்,**

சைவப்புலவர், திருப்புகழ் இரத்தினம், வித்துவான்

க. பா. வேல்முருகனார்

திருப்பாதிரிப்புலியூர்



துர்மதியாண்டு, சித்திரைத் திங்கள், ஐந்தாம் நாள் (17-4-81)

**மஹாகும்பாபிஷேக நாள் வெளியீடு**

ஓம் சக்தி

## 'எல்லாம் சிவனென்ன நின்ருய் போற்றி'

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்—', 'ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்——' என்றெல்லாம் அறிவுரை கூறப் புகுமுன்னரே, 'ஒன்றவன்ருனே——' எனத் தொடங்கி, அவன் அருளுடன் கூடியக்கால் இரண்டாகிருன். அன்றியும், நாம் காணும் — காணுத பொருள்களுமாய் யாண்டும் விரிந்து பரந்து நிற்குந் தன்மையை முதன்முதலிலே திருமூலர் உணர்த்தி விட்டார்.

இறைவழிபாடு - சக்தி வழிபாடு முதலியனவெல்லாம் திருமூலநாயனுரால், உலகினர் உய்ய முதன்முதலில் தெளிவாகக் கூறப்பெற்றவை. நான்காந் தந்திர 5, 6, 7ஆம் பிரிவுகளாய் விளங்கும் சக்திபேதம் - திரிபுரை சக்கரம், வயிரவி மந்திரம், பூரணசக்தி என்னும் பிரிவுகளில் இறைவி பற்றிய விவரங்கள் யாவுமே அடங்கிவிட்டன எனத் தெளிவுபடுத்துகிருர். இருபாலாகி இயலும் மக்கட்கு அவைகொண்டே தெளியவைத்தல் சிறப்பென உன்னியே ஆன்ருேர் விரித்து அருளினர் என்பதே உண்மை.

திருவருட் செயல்கள் சில, இந்நூலில் சுட்டியபோது இறைவன் இறைவி என்ற வேறுபாடற்றுக் காணப்பெறும். அவை, இறைத்தன்மை ஒன்றினுக்கே ஏற்றப்பெறல் வேண்டுமெனுந் துணிபால் எழுந்தமையே.

'வீடும் வேண்டா விறல்' எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் நிலை வருதல் வேண்டும். அந்நிலை வருதல் எளிதன்று. எனினும் இறைப்பற்ருென்றே பற்றி நின்ருல் ஒவ்வொருகால் கூடும். கூடிய அதனை நிலைப்படுத்திக் கொள்ளவே, அன்பர் கூட்டுறவு, வேடம், ஆலய வழிபாடுகள் கொண்டு நேயமிக்க மனத்தினராதல் வேண்டும். இந்த நெறிகளில் இடையருது ஒழுகிவிட்டால் 'நிஷ்காம்ய பக்தி' எனப்படும் பெருநிலை வந்துறும். இதற்குப் பாடுபடவே இறைவன் இவ்வரிய பிறவியினையளித்தான் என உணர்தலும், ஓரளவு, தனக்குக் கிடைத்த பேறுபோலப் பிறரும் பெறல் வேண்டுமென்னும் அருள்நோக்கங்கொண்டு ஆலயம் அமைத்தல் — புனைவு படுத்தல்; வழிபாடு மேற்கொள்வோர், ஒருமனப்படுத்திய சிந்தை

யினர் முதலாயினோரை ஓம்பல் ஆகிய நெறிகள் நம் தமிழ்ப் பண்பாட்டிலே பெரிதும் கடைப்பிடிக்கப்பெற்றன. அருள்நெறி-முற்கூறியவாறு மேற்கொள்ளுஞ் செயல்களைப் - பற்றிக் கூருத நீதிநூல் ,ஏதுமில்லாமையை உற்றுநோக்கின், தமிழர், வீடும் வேண்டாவிறல்' கொண்டு வாழப் பற்பல வழிகொண்டும், கொண்டாரை ஆதரித்தும் வாழ்ந்தனரென்பது நன்கு புலனாகும்.

இந்நெறி, இந்நூலில் ஆங்காங்கு காணப்பெறுவதும், 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மறைமொழி பற்றி அறியாதார்க்கு அவ்வறிவு கொழுத்துமாறு தேவியைப் பரவுமிடங்களும் சில வந்தமையைச் சான்றோர் உலகு ஏற்கும் என்ற துணிபுடன் இந்நூலிற் பிழைகளுளவேல் அறிவித்தருளித் திருத்திக்கொள்ள வழிகாட்டுமாறு அறிஞரை வேண்டிக் கொண்டு, தேவியின் அடியார், அன்பர் திருவடிகளைப் பணி கின்றேன்.

இறையருள் வெல்க. தேவி புகழ் வாழ்க.

அடியார்க்கடியன்
க. பா. வேல்முருகன்
திருப்பாதிரிப்புலியூர்
தமிழ்நாடு

ஓம்
ஸ்ரீ சக்தி

ஈழநாட்டு - யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை.

அருள்மிகு

# துர்க்காம்பிகை யந்தாதி

## காப்பு

### 1. ஸ்ரீ கணபதி

நல்வித் தகர்நனி ஞானமுஞ் செல்வமு நாடருஞ்சீர்
கல்விப் பெருக்கமும் பெற்றொளிர் வான்தந்து காக்கும்அன்னை,
தெல்லிப் பழைதிரு துர்க்காம் பிகைதன(து) ஏர்உரைக்கச்
செல்வக் கணுதிபன் சிந்துரச் சேவடி சேர்மனனே.

### 2. ஸ்ரீ சிவபிரான்

தேமலி கொன்றையுந் தீம்புனல் மத்தந் திகழ்சடையோன்
நாமலி கேதீச் சரத்துந் திரிகோண நன்மலையோன்
பாமலி தெல்லிதுர்க் காம்பிகை பாடல் பணிந்துரைக்க
நேமலி யுள்ளத் திருத்தித் தொழுவமால் நீடருட்கே.

### 3. முருகன்

வேலை கலக்கிவிண் ணோரைக் கலக்கிய வெங்கொடுஞ்சூர்
வேலைவிட் டேமயில் சேவலாய்க் கொள்பான் மீதுணைத்தாள்
காலையு மாலையும் ஏத்திநம் வல்வினைக் கட்டறுப்பாம்
சோலைசூழ் தெல்லிதுர்க் காம்பிகை யந்தாதி சொல்லுதற்கே.

## நூல்

பூமலி கற்பகக் காவினன் நான்முகன் பொன்உரம்சேர்
நாமலி மாலவன் நல்உருத் ரன்இவர் நாண்மலர்தூய்ப்
பாமலி தீந்தமிழ் ஏத்திநின் நாளும் பரவுவரால்
காமலி தெல்லிதுர்க் காம்பிகை யேசெழுங் கண்மணியே.

கண்மணி யாய்ஒளி காட்டியே நுண்ணொளி காண்மனத்தே
பண்இசை காட்டும்இன் பாம்என நின்றனைப் பார்த்திருப்போர்
விண்ணொளி யாய்ஒளிர் உன்னொளி மேகத்தே வேல்விழிபார்த்(து)
உண்மகிழ் கூர்வர்அப் பேறெனக் காக்குவை ஒள்ளமிர்தே.

அமிர்தமொத் தோங்கும் அருள்கடைக் கண்ணோக் கமைவலத்தால்
இமிழ்திரை வையகத் தீந்தமிழ் பாடுவார் ஏர்அகத்தே
தமியளாய் வந்(து)அவர் இன்புறு மாறுநின் தாள்நிழற்கீழ்
அமிழ்த்திவைத் தாள்வைய டிமைக்கு மங்ஙன் அருள்வதெந்நாள்.

எந்நா ளிருவினை யொப்பெனக் குன்னரு ளேயளிக்கும்
எந்நா ளருள்படைத் துன்கடைக் கண்ணினோக் கெற்குவீழும்
எந்நா ளிருண்மல மாயைவிட் டேசிவ என்றிருப்பேன்
அந்நாள் விரைவினி லாகநிற் போற்றுவன் ஆரணங்கே.

அணங்கெனப் பொன்னெனப் பூமியுந் தானென அல்லலுற்றே
பிணங்குமில் வாசை வெகுளி மயக்கமும் பீடழித்தே
குணம்பல கொள்ளவுங் குற்றமே நீக்கவுங் கூட்டிவைப்பாய்
கணந்துணை நாட்டமிப் பாலதே யாக்கு கருணையன்னே !

அன்னைதா தையென ஆன்ற உடன்பிறப் பத்தனையும்
பின்னைநீ யேயென் றிருப்பவும் பற்றெலாம் பீடழித்தே
தன்னை மறந்துமெய்த் தாளுறு பற்றே தழைக்க என்னுள்
அன்னையே நின்றருள் ஆதி பகவனென் றாகியாங்கே.

ஆங்குன் திருவடி கால அசுத்தமா யைக்கெலாமே
ஆங்குன் திருவடி வாக்கெனுஞ் சுத்தமா யைக்கடந்தே
ஆங்குன் திருவடி மாமன எல்லைக்கே அப்பாலதாம்
தீங்கடச் சிந்தையுள் தெள்ளிதின் நிற்பதாஞ் செம்மலரே.

செம்மலர் நோன்றாளைச் சேரவொட் டாதே சிறுமைசெய்யும்
அம்மல மாயை கழிக்கநின் அன்பர் அணைந்திருக்கும்
பொம்மெனுங் கூட்டத் தொருவனா யென்னைப் புகுதவைப்பாய்
கைம்மலர் கொண்டுநின் தாள்மலர் தூவுவார்க் கண்டுணர்ந்தே.

உணர்ந்தார்க் குணர்வரி யோன்திருத் தில்லை ஒருமுதல்வன்
மணந்தாழ் அலங்கற் குரியனாம் சண்டி மனோலயம்போல்
கணந்தான் நிலைநிற்கு மாறே கவின்மனங் காணவைத்தாய்
கணங்கான் லெலேனைக் குணந்தந்து நின்னருள் கூட்டிவையே.

வைப்பதுன் பாத மகிடன் தலைமிசை வானமுய்ந்தார்
வைப்பதுன் பாத மெளியன் தலைமிசை மால் கொடுப்பாய்
வைப்பதுன் பாதமென் கன்மன மேலே மலரவைப்பாய்
வைப்பதுன் பாதம் அடியர்மேல் எற்குமே வாய்ப்பதாமோ?

வாய்தலை கையெனக் கால்மனம் கண்என வாய்த்திருந்தும்
பேயென வாழ்த்தேன் வணங்கேன் குவித்திடேன் பீடழிந்தேன்
தாய்உன் தளிவலம் சூழ்கிலேன் உள்ளச் சிறையிடேனல்
நாயினேன் கண்டுய்தல் இப்பிறப்பேயோ? நகையதாமே!

நகைத்திருந் தாருனை நச்சிய நாயினேன் பாடுகண்டார்
மிகைத்தசொற் பாரா தடியினைப் பற்றே மிசைந்திருந்தேன்
தகையணங் கேநின தாள்மனத் தின்புற்ற தன்மையெல்லாம்
வகைவகை யாய்சொல வல்லெனோ நீயறி வாயதன்றே.

அறிவகை நாடி அறமுதல் நான்கை அறஉணர்ந்தும்
துரியமேல் நின்ற சுகோதயம் காணத் துணிவிலார்தம்
பெரியபேர் வாய்ப்ப தெனக்கென் றெனதினம் பின்னெளித்
கரியளே செய்யளே சங்குசக் ராயுதக் கற்பகமே. [தேன்

கற்பக நாடன் மலரவன் மாலவன் காண்பதங்கள்
முற்பகல் போலே முடிவதெந் நாளும் முடிவிலின்பம்
அற்புளங் கொண்டோர் அடைபர முத்தி அதுஎனக்குப்
பொற்புடன் ஈக இருவினை யாவுமே போக்கி அன்னே!

போக்கும் வரவும் புறம்பும்உள் ளும்ஆம் புகலவொண்ணு
வாக்கும் வடிவமும் முடிவுமொன் றில்லா வனைகழல்கள்
தாக்கும் மனோலயம் சாருமப் போதே சகத்தினைப்பும்
நோக்குமங் கற்றே நுகருதேன் போக நுவலவற்றே?

போகநீ டாக்கிப் புவனமெங் கெங்கும் புனையிருளே
ஆகவென் றேசெயுன் ஆடல்உன் னார்இகத் தாவரெல்லாம்
ஏகமாய்த் துய்த்ததில் மூழ்கி இருள்கெடுத் தேகலன்றி
மோகமாழ்ந் தேபர முத்திகாண் கில்லார் முடிவில்நாளே.

முடியாப் பிறவிக் கடல்புகுந் தாழார் முதல்வி தொண்டிற்(கு)
அடியார் எனத்தமை ஆக்கினர்; அல்லார் அவலமுற்றே
மடிவார் இனிப்பிறந் தெய்த்தே அவசமுற் றுழ்வரந்தோ!
செடிதீர்ந் துனையடை யத்திருக் கண்களே சேர்ப்பையன்னே.

கண்ணு ரமுதக் கடல்கடைந் தாலெனக் கண்டுநின்னை
விண்ணோர் தெரிந்தலர் பொன்னடிபோற்றி மிடைந்துநின்றே
பெண்ணு ரமுதே பெரியநீள் கண்ணேக்குப் பெற்றிருப்பார்
எண்ணு இரவும் பகலுமே போற்றுவன் இன்பருளே.

போற்றியெ னன்னை புனிதநெல் லிப்பழைப் புங்கவர்தேர்
மாற்றரு சக்தி! திரிபுரை யாமளை வைணவியாய்த்
தோற்றிப் புவனமெல் லாமே புகல்தரு சௌந்தரியே
கூற்றங் குமைப்பான் வருநாளென் முன்னங் குலவுவையே.

குலவுதில் லையோன் தமருகம் தோற்றும்; கொழிவலக்கை
நிலவும் அபயம் திதியதாம்; அங்கிசேர் நீள்கரந்தான்
பலவும் அழிக்கும்; முயலகன் மேலே அமிழ்த்தபாதம்
மலமதை நீக்கும்; மகிழ்குஞ் சிதமலர் வான்பதமே.

பதமலர் தூக்கிப் பயிலும்அந் நட்டம் பகருமைந்தாய்த்
துதிசெய் எழுத்தாம் அதுவே துணிக்கும் துரிசையெல்லாம்
நிதம்உணர் ஓதித் திருநீ றணிகெனு நீள்கடைக்கண்
கதிதரக் காண்சிவ காமியென் றோதுங் கடலகமே.

கடலகத் திழம் கவிப்பயன் என்னக் கலந்துநிற்கும்
மடஅனம்! நின்னை மனமுடை யோர்துதி வாழ்த்திநிற்பர்
உடனமர் பூவும் புனலுமே கொண்டுணர் வோரிடையே
இடனளித் துன்பத நீழலிற் சேர்த்தே இயவிப்பையே.

இயைவதெல் லாநினக் கன்பரிற் கூட்டம் இதையருள்வாய்
பயனதில் லாநெடு நாள்கடந் திட்டேன் பகரறஞ்சொல்
தயையினிற் றுழா திருந்துநாள் போக்கிச் சலிக்கநின்றேன்
இயைவன காட்டி எளியனை யேற்பாய் இணையடிக்கே.

இணைகநின் மொய்புகழ்க் கென்செவி நாவும்; இறைப்பொழுதும்
புணையென ஆடா தொளிமனம் நிற்க பொலங்கழற்கே;
துணையென யாண்டும் நினதருள் சேர்க தொடர்ந்தெனைநீ
அணைகநா னஞ்சுபேய் பூதமே யாதியா மச்சநீக்கே.

நீத்தார் தொழும்பரி செற்குநின் னலன்றி நேர்வதாரால்?
மாத்தார் தவள மாணிக்க வைர மரகதங்கோத்
தேத்தா தொழுமன் பரேமு னிருக்க எனக்கருள்கை
வாய்த்தா லெளியனும் வாழ்வெனல் வாழ்வோ வரம்பிலின்பே.

வரம்பிலின் பாக்குநின் மாதிருச் சந்நிதி வந்துநின்றூர்
கரம்சிரம் கூப்பியே கண்ணரு விப்பாய் களிமகிழ்வால்
பரம்பொருள் நீயே பசுபதி நீயென் பவர்செயல்போல்
நிரந்தரம் யானும் நினைத்தொழு துய்ய நினைவையன்னே.

நினைப்பதுங் காண்பதுங் கேள்வி உயிர்ப்புமே நின்வயந்தான்
மனைக்குளே சார்ந்து மகிழ்உண நின்னை வரம்பிலின்பம்
தனையெண இங்ஙன் சமைந்துளோர் நாப்பண் தமியனையும்
உனைத்தொழு தேத்தி உயும்வகை யருள்வையோ ஓங்காரியே.

ஓங்கார நாதம் ஒலிகடற் புள்ளொலி உற்றகாலே
ஈங்கார் மலையெதி ரோசை எழிலி இடியுமாமே
பாங்கான வேய்ங்குழல் சங்கொலி வாய்க்கும் பணைமுழக்காம்
நீங்கா மணியொலி யாகி யடியர்பால் நிற்பையன்னே.

நிற்ப நடப்ப கிடப்பவே போல நிலையிலாநாள்
உற்றே கழித்தேன் உறுகழல் நாட்டமே ஓதுநூல்கள்
கற்றே னலேன்பிறர் காணப் பிழையிற் கலந்துவாழ்வேன்
பற்றே தெனக்குன் தாளன்றி யில்லேன் பரிந்தருளே.

அருளே கடைக்கணுன் அன்பே திருமுடி ஆங்குவீசும்
இருளே ஒழிக்கும் சுவாலையே யாம் அதன் ஈர்ப்பெமக்கே
மருளே ஒதுக்கி உறுநெறி பற்றியே வாழவைக்கும்
கருவே வராத கதியினி லாக்குமாங் கண்ணொளியே.

ஒளிமன மேஉயர் அன்னை பராசக்தி ஊன்புகுந்தே
அளிமன மாக்கி அவளதாள் உன்தலை ஆரவைப்பாள்
களிமகிழ் வாலே கருதரு துன்பங் கழித்துவைப்பாய்
துளிபொழு] தேனுநீ துர்க்கையைச் சிந்தி துயரொழியே.

துயரமே தெற்குன தூயநா மத்தொளி தோய்த்திருப்பேன்
துயரமே தெற்குன மாதிருச் சந்நிதி துன்னிநின்றேன்
துயரமே தெற்குன தொண்டர்பா லன்புசெய் தொண்டனேன்
துயரமே தெற்கெதிர் காலனே வந்தெனைச் சூழமாலோ?

சூழுநின் மெய்யடி யார்மலர் மாலை தொகுநரோர்பால்
வாழுந் தமிழ்மலர் மாலையே கொண்டடி வாய்நரோர்பால்
வீழுமிம் மெய்யே பொடிப்பக் கருணை வியப்பரோர்பால்
ஆழநல் உள்ளந் தவிரயோ கத்தார் அமரரேயோ !

அமரரா ஞரும் அடைதற் கரியநீ எண்மையாகித்
திமிரநீர் சூழும் இலங்கைத் தமிழ்நிலத் தெய்தினையால்
அமிழ்தமே யாமுன் திருவுருக் கண்டார் அறிவரன்றை
இமிழ்திரை வைப்பிலே யாண்டுந் திருவருள் ஈயுமன்னே!

ஈகையே என்னிடம் எள்ளள வேனும் இயைவதன்றால்
ஓகையால் ஈபவர் பால்நிதம் ஓடுவேன் உய்கையுண்டோ?
சாகையே தாங்கும் உடலம் வளர்க்கச் சமைந்தொழிந்தேன்
தோகையே நின்ன கடைக்கணால் வாழ்க்கைச் சுழலொழியே.

ஒழிக்கும் அகஇருள் ஓட்டும் வினைகள் ஒளிமிகுத்தே
அழிக்கும் தனிநல ஆசைமூ வேடணை ஆம்குறைகள்
தெழிக்கும் அறமெலாம் தீந்தமிழ்ப் பாடல் செழிக்கஆங்கே
கொழிக்கும் பொருணல மாதியாந் துர்க்கை குளிருநோக்கே.

குளிர்தருங் கோடைவெப் போட்டுநல் வெம்மை கொடுங்குளிரில்
அளிதரும் அன்பில் மனத்தே; பவக்கடற் காம்புணையாம்
களிதரும் பத்தினோ டைந்தெழுத் துன்னுங் கவின்மனத்தே
அளிதர நிற்குந் தெல்லிநகர் துர்க்கை அடிமலரே.

அடிமலர் பாதலத் தப்புறங் கீழாம்; அவள்முடியோ
கொடிகொளுங் தேவர் குவையுல குக்கெலாங் கூடிமேல்ஆம்
படிமிசை யன்னாள் அருள்கடைக் கண்ணொளி பாங்கினெங்கும்
வடிதமிழ்ப் பாவினுக் கன்னை பரிசே மதிப்பதாமோ?

மதிப்பிருந் தாவிவ் வுலகினர் வாழ்த்தும் வரம்பிகந்த
துதிகளும் சேரும் இயல்புகண் டியாருந் தொலைபொருட்கே
அதிஉழைப் புக்கொண் டவைகுவித் தாங்கே அடிமையாவார்
பதிபசு பாசத் தியல்பெலா நோக்கார் பகுத்தறிவோ?

பகுத்தறிந் தேநலம் தீங்குசெய் மாயை பழித்தொதுக்கி
உகுத்தகண் ணீரால் உனைபொழு தெல்லாம் உளத்தடைப்பார்
மிகுத்தமக் கள்மனை சுற்றமென் றின்னமால் வீழகில்லார்
வகுத்தமர் வாழ்விலே வாழ்வாங்கு வாழ்ந்தெழில் வானுறலே.

வானநீண் முத்தாய் வளருநென் முத்தமே மற்றுணநீ
ஆனவா றுர உணர்ந்துநீ டின்பால் அயர்ந்திடேனல்
ஊனுடல் வேரு யழிவதன் முன்னம் உறுதிதந்(து)ஆள்
போனஆ! பன்னாள் இதயத்(து) இருந்(து)ஆள் புதுச்சுவையே.

சுவைஒளி ஊறோசை நாற்றமென் றைந்தைத் துலங்கவைத்தாய்
நவைநவை யென்பவோ பற்பல மேவுவ நாடவொண்ணு
அவையிகந் தென்னையாட் கொள்கவென் பேற்கும் அமைதி தந்(து)ஆள்
குவைகடந் தின்னடிப் பற்றருள் 'துர்க்கையாங் கொண்டலாளே.

கொண்டலாய் வந்துநீர் யாண்டும் நிரப்பிக் குளிரவைப்பாய்
மண்டெரி தீயினுல் உண்பதம் ஆக்கியே வாழ்வளிப்பாய்
திண்டிறல் தந்தே திசையெலாம் வெற்றி தெருட்டிவைப்பாய்
மிண்டு மயக்காம் மகிடனை மாய்த்திவண் மேவுமன்னே.

மேவுவர் நின்பதம் செல்வநல் ஆள்திறன் வேண்டிநிற்பார்
மேவுவர் நின்பதம் கல்வி கலைமிகு வீரமென்று
மேவுவர் நின்பதம் நோயிலா ஊனுடல் மேதகையோர்
மேவுவர் நின்பதம் ஊன்பொதி போக்கிவான் மேவியென்றே.

என்றுநான் உன்திருக் கோயில் அலகு மெழுகிடுவேன்?
என்றுநான் பூத்தொண் டியற்றிதீ பத்தால் இயைகஞானம்?
என்றுநான் அன்பர் இயங்குவா யிற்கணே ஏக்கறுவேன்?
என்றுநான் நின்முகத் தின்பமார்ந் தேத்தி இருந்துமாய்வேன்?

மாய்ந்தொழிந் தார்மலப் புன்குரம் பைக்கே மகிழ்ந்தளித்தார்
மாய்ந்தொழிந் தார்மனங் குன்றிதம் நன்மை வயங்கினரே
மாய்ந்தொழிந் தார்அவா வேமுதல் ஆறுதீ மைக்குணமே
மாய்த்துயர்ந் தார்நின தாளிணை யன்பின் மயக்கெலாமே.

மயக்கறக் கண்டிகை நீறுபூண் சீலர் மதிமுடியே
தயக்கமில் என்றேற பழத்துடன் அன்னம் தரும் அணைதான்
வியத்தகு பேயாய்க் கயிலையா னம்ம! எனவுறுவாள்
நயக்குமவ் வன்பே யருளுவாய் துர்க்கா நலமுறவே.

துர்க்கா! எனஉனைச் சொல்லுநா ஆர்ந்தே சுவைமகிழும்
துர்க்கா! எனஉனை உள்ளுநெஞ் சென்றுந் துயருறுதாம்
துர்க்கா! எனஉனைக் கூப்புகை வெற்றி தொடருமாங்கே
துர்க்கா! எனத்தளி சூழுகால் யாண்டும் தொடர்நடையே.

நடைநயந் தாற்ற நதிதலம் என்றே நலந்திரிவார்க்
குடையுண வுன்னையே உன்னி உவந்தார் உயர்ந்துநின்றார்
கடைதலை வந்த வறிஞர் அறிஞர் கணக்கிலாதோர்
மிடைதலைக் கண்டும் சுணங்கா தளித்தார் மிசைவரின்பே.

இன்ப அமுதமாம் வாய்க்கல சப்புனல் ; ஏந்தும்ஓர் கை
அன்பின் அமைத்தஊன்; ஆர்தலைப் பூப்பூசைக்(கு); அம்புவில்கை
என்புநெக் கேங்கியே ஏறி மலைக்கொழுந் தேற்பசெய்தே
பின்புகண் ணப்பிய அன்பெமக் காக்கு பெருங்கண்ணியே.

கண்ணனின் தங்கையே காப்பதுன் பாரம் கருணையன்றாய்
மண்ணுல கத்துவே றில்லை உறுதுணை வானமிர்தே !
எண்ணிநின் னுமமேத் தித்தொழு வாரை யினிதருட்கண்
நண்ணித் திருவருள்கூட்டு கருணைசேர் நற்கடலே !

கருணைக் கடல்விழுந் தாருனை நத்தினார் காணுபேறே
அருண அருக்கன் மதிதமின் மேலதாய் ஆருமின்பம்
தருணம் பெறுவர் தகையிதை யெவ்வெவர் சார்புணர்ந்தார்?
மருணனி யுற்றார் அறிந்திலர் அன்னார்க் கருள்புரியே.

புரிசடை நீலி புரமூன் றெரித்தும் பொலமலரோன்
சரிந்தான் இயமன் சலந்தரன் அந்தகன் சார்ந்தகாமன்
திரிகுணத் தக்கன் கயம்உரி வீரட்டம் தேர்ந்திருந்தான்
ஒருபங் கிருந்தாய் மகிடனை மாய்த்தாய் உயரருளே.

அருள்கொழி நாட்டம் அமுதவாய்ப் புன்னகை ஆர்ந்தஞானம்
தருசெப் பிளமுலை சேர்கலா பத்திடை சார்ந்தவர்க்கே
அருமைவீட் டின்ப மளிக்குந் திருவடி ஆழ்ந்தஅன்பால்
உரிமைபூண் டேற்கும் வகையருள் நோக்கே உவந்தருளே.

உவந்திருந் தேன்மனை மக்களென் றன்னார் உவந்ததேடி
உவந்தமால் போக்கி அருள்உகந்(து) தென்மனம் ஓர்ந்துகூட்ட
உவந்திருந் தேன்மலர் மாலைதாழ் கையராய் ஓங்குவோருள்
உவந்திருந் தேன்திருச் சந்நிதி பாடுவோர் ஓங்குநீரே.

நீர்க்கோல வாழ்வில் நெடுநாளிருந்தென்ன? நீடருளிற்
சேர்க்காத நெஞ்சம் திரிகுண மாயை தெரிந்தனையைப்
பார்க்காத கண்ணுனக் கன்றதை உண்முகம் பார்த்துநின்றே
ஊர்க்கால் நிவந்தன்ன நற்பயன் கொள்வாய் உறுமனமே !

மனமே ! யுனக்குநான் சொல்வலொன் றுற்றார் உறவினோர்கள்
தினமே புகழ்வருன் செல்வ முதலாம் திரட்சிகண்டே
மனமா சிலார்க்கே மலரடி யுள்கி வழங்குமேலும்
இனமா யவள்புகழ் பாடுநர்க் கீந்தவ ளேத்துவையே.

ஏத்துவர் அன்னைநி னின்னடி போற்றி எழில்வலங்கொண்
டேத்துவர் தண்மலர் மாலைகள் நின்னதாள் ஏர்களித்தே
மாத்தளை பூட்டுவர் மால்விடுத் தேதம் மனச்சிறைவைத்
தேத்துநர்க் கீடிணை யின்றவர் தாண்மல ரேத்துவனே.

தாண்மல ரல்லதோர் நீண்மல ரில்லை தலைதனக்கே
மாண்தமிழ் பாடிவண் டார்மல ரிட்டே மகிழ்வினேத்து
கோண்முதல் யாவுங் குரைகழற் பற்றினர்க் கூறுசெய்யா
மாண்பிவை நன்குணர் மாலுறேல் நெஞ்சே ! மதிநினக்கே.

நின்னன்றி மற்றொரு தெய்வமிங் கில்லை நெடிதுநெஞ்சில்
நின்னன்றி அப்பால் நினையா நினைப்பருள் நித்தமோங்கி
நின்னன்றி ஏது நெடிதுல கிற்பற்று? நீநினைந்து
நின்னொன்றி நிற்கு நிலையருள் துர்க்கா ! நெடும்புகழே.

புகழ்வேன் நினைஅனை கந்தமா தாசைல புத்ரியானாய்
தகுப்ரும்ம சாரிணி மேனிறை வாயினாய் சந்த்ரகண்டா
மிகுகூசு மாண்டா மிடைகாத்தி யாயினி காளராத்ரி
வகைமகா கௌரி வளர்சித்தி தாநவ துர்க்கையாளே.

நவதுர்க்கை யன்னே நளினப் பதஞ்சேரு ஞானிகட்கே
பவமாய்த் திடுவை யெனினுமிங் குன்னலாற் பற்றிலேமால்
சிவமெனத் தேர்ந்தேம் திருப்பேர் பதினா றெழுத்துநெஞ்சில்
தவமுறை வையேற்குன் தாளிணை யல்லாற் புகலுமுண்டே ?

புகலுறு மாயிர கோடியண் டங்கள் புதைந்தநின்னுள்
தகவினின் மாலோன் பிரமனென் றியாவருந் தாழ்பவாழ்த்தி
மிகநின் கடைக்கணேக் காலெவ் வெவரும் விரும்புமெல்லாம்
சுகமுறப் பெற்றே துதிப்பரா லன்னே துனிகடந்தே.

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலைமீதே
மிடல்கொண் டெழுந்தான் காற்சில் விரலால் மிதித்தழுந்தத்
திடல்சாம கீதம்செவியேற்று வாளுந் திறல்கொடுத்தான்
அடல்கொண்ட பாகம் பிரியாத துர்க்கை அமரதேவே.

அமரரா னோர்கள்தாம் அண்மிநின் அன்பிற் கருகிருப்பார்
திமிரமா ஞாலத் தவரெலாந் தூரத் திருப்பரென்றே
அமையுங் கருத்தே அதுதவ றுமெனு மான்றவர்சொல்
இமையவர் வந்திங்ஙன் பூசித்த மாத்தலம் எண்ணிலவே.

எண்ணிலாக் காலந் தவமிருந் தார்நீ ளினிமைநோக்கி
எண்ணிலா நாள்கள் இன்பமே பெற்றூர் எவர்க்குவாய்க்கும்
எண்ணிலா நாள்வீண் கடத்திய நானுமே இனியவேண்டி
எண்ணிநா னுன்னையே ஏத்துவன் அன்னுய் இனியருளே.

இனியளே மீனுக்ஷி கன்னியே மூாவைநீ எட்டுலக்ஷ்மீ
நனிநவ துர்க்கா நவசக்தி யாயினுய் ஞானசக்தீ
புனிதஇச் சாக்ரியா ஆதியாம் சக்தீ புகலொணுத
வனிதே பராசக்தி பற்பல் உருவா வயங்குமாதே.

மாதுநீ விண்ணின் மதியா யிருந்து வளர்முளேமேல்
ஏதுகொள் பாலே பிடித்திட நீள்ரச இன்புமாகித்
தீதடை யாமே திகந்தளல் லேயிற் றிருநிறைத்தும்
ஓதுநுண் பாடற் பொருளென நிற்பா யுனதுபண்பே.

பண்புற்ற கல்வி பகரறச் செல்வம் பணிவிறைக்கே
எண்தக்க புத்தி புலனடக் கத்தோ டினியவாழ்வு
மண்தக்க தொண்டின் மலிந்தரு ளாளர் மகிழியையும்
உண்டென்னி லன்னுய் உயர்தாளிணைக்கே உறுகவானே.

வானமோ மண்ணே கடலிடங் கொண்டோ வளருயிர்போம்
ஆனவா தேறி அகமுளே துர்க்கை அணிகொளுவே
மானநீ நெஞ்சே பெறினவ் விடமவள் வந்துதோன்றி
ஈனமாந் தேகம் எடுக்கொணு முத்தி இனிதருமே.

இனியதீ தென்ரு பகைமைநண் பென்ரு எதிர்ப்பிலாத
கனிவுறு வாழ்வோ இலாமைமே லோங்கக் கணக்கிலார்போல்
நனியழி போதோ நகைசினத் தாலோ நடுவினீங்கா
மனமொடுன் பாத நினேப்பருள் போற்றி மதிநுதலே.

நுதல்விழி நாட்டத் திறையொரு பங்கே! நொடித்தபோதே
கதமுறக் காலன் கவர்வான் வருநாள் கணப்பொழுதில்
உதயபா னுப்போல் ஒளிநிறை வோடே உவப்பஎன்முன்
துதிசெய வாக்கும் தெளிமனம் சேர்ப்பை துடியிடையே.

துடியிடை ஞானம் குழைத்துநீ ஊட்டவே தோடுடைய
படிமிசை ஐந்தெழுத் தன்புநீற் றண்ணல் பகர்பெருமை
வடிதமிழ்ப் பாவாற் பரசம யக்களே மாற்றியுய்த்த
நெடியநீள் தெய்வத் திறமெலா நின்னுற் சிறப்பதாமே.

சிறந்தார் புனித னருட்டுணை நீற்றறை சிந்தையில்லார்
மறந்தாழ் களிறு விடத்துடன் சோறு வரிந்தகற்றூண்
திறத்தா லருட்புணை யாக்கித் திருப்பா திரிப்புலியூர்
உறைந்தோய் கரையேற விட்டவா ! ஐந்தெழுத் தோதியாங்கே.

ஓதிய பித்தா எனுமறை வாக்கால் உறுசகமே
மேதினி யுய்யு நெறிதெறித் தற்புத மிக்கருளி
நீதியாற் பானுட் பரவைபால் தூது நெறிசெலுத்தும்
ஆதிஆ ரூரரைப் பூவினிற் சேர்த்தாய் அணே! உயவே.

உயதிரு வாசகம் பெற்றிட என்றோ உழுவலன்பர்
பயனுறு தற்கோ பிரம்படி கொண்டாய் பழையமண்தான்
புயமதில் ஏற்ருய் புனிதவந் திக்கோ மணிமொழியை
மயலறுத் துய்கெனக் கையால் வரைந்தாய் மதிவதனீ !

மதிவத னம்மேன் மரகதச் சுட்டி வதிசுவாலை
குதிதரு விற்புரு வக்கடைக் கண்ணே குமுதவாயிற்
பதியும்ஏர் இன்னகை மார்பின் வயிரப் பகர்மதாணி
கதிதரு தண்டை யணியும்இன் பாதம் கணநினையே.

கணப்பொழு தேனும் அனைமனங் கொண்டாற் கவினுறலாம்
கணப்பொழு தேனும் அனைமறந் தேனெனிற் கைம்மாறிலேன்
கணப்பொழு தேனும் அடியிணை நெஞ்சிற் கனக்கவைத்தே
கணப்பொழு தேனும் அருளின் திளைப்பாய் கவின்மனமே.

மனமே நெடுந்துயர் மக்கட் பிறப்பிலே மாழ்கிமேலும்
சினமே யுவகையே லோபமே மோகமே சேரஇன்னும்
தனமே பெருக்கிமேற் புண்ணிய பாவத் தளையுறேல்நீ
தினமே தெல்லிப்பழை துர்க்காம் பிகைபதம் சேர்திநன்றே.

சேர்ந்துவா கூற்றுவ ! நீமுனம் பட்டது தேரகில்லாய்
ஆர்ந்துளம் நிற்பவள் அன்னைதுர்க் காம்பிகை அன்றுநீயே
மாய்ந்துவீ ழத்திருப் பாதமே ஊன்றினுள் மாணிகாத்தாள்
தேர்ந்தவ ளன்பரை யண்மிநில் லாதே சிறுமையாமே.

சிறுமைப் படுத்திப் பிணிக்குநோய் காள்நீர் சிதறிவீழ்வீர்
உறுமிவ் வுடலத் தினிமையோ துன்பமோ ஒரநானுர் ?
நறுமலர் சூட்டுவன் நாவினிற் பண்ணு நவிற்றிநாளும்
வறுமையே யோட்டுவாள் தெல்லிநகரானை வழுத்துவனே.

வழுத்துவர் சந்நிதி மேனி புளகம் மகிழ்கணீரின்
பழுத்தநின் தொண்டர் பதைபதைத் தின்புறப் பார்த்திருப்பேன்
கொழுத்தஎன் மெய்யோ சிறிதும்ஆ டாமற் குவிமனமோ
விழுப்பமோ இன்றி மரமதே யாவேன் மிடைந்துநின்றே.

மிடைந்துநின் றூர்மன மாசொழித் தாரெலா மேன்மைபாடி
மிடைந்துநின் றூர்மனத் திண்மையால் உன்னடி வேண்டுவாருள்
மிடைந்துகேட் பேன்இகத் தின்பமே முன்வினை மேலதாலோ
கடைந்தஎன் தாழ்மனம் போக்கிக் கழலடி காணவையே.

கழலடி காணக் கடுந்துயர் நீங்கிக் கனமுறுதும்
கழலடி காண உடலுண வாசை கரையவோடும்
கழலடி காணப் பெருகுமா லின்பமே காண்பவான்றோர்
கழலடி காணக்கா டோடவேண் டாஅறம் காப்பதில்லே.

இல்லத் திருந்தார் புவனஆ சைக்கே இணைவரென்ற
சொல்லுக்கு நூலா தரவில்லை ஆன்றோர் துணிவுமில்லை
கல்லுக்கு ளேவளர் தேரையுங் காக்குங் கருணையன்னை
மல்லற் பதாம்புயப் பற்றுடன் வாழ்க மகிழ்நெறிக்கே.

மகிழ்நெஞ்சு வேண்டா இகழ்நெஞ்சு வேண்டா வசைஇசையால்
நெகிழ்நெஞ்சு வேண்டா திகைநெஞ்சு வேண்டா நிலத்தகத்தே
நிகழ்செல்வம் வேண்டா நிரப்புமோ வேண்டா நெகிழுநெஞ்சம்
புகழ்சே வடிக்கணே ஞானங் கொடுப்பாய் பொலந்திருவே.

திருவென உன்னைத் துதிக்கவோ கல்வி சிறந்ததேவாம்
உருவமர் வெண்டா மரைமலர் தாங்கும் உவந்தமாதோ
பொருவிலா வெற்றிக் கொற்றவை யென்றே புகழலாமோ
வருதிரு துர்க்கா நினதருள் யாண்டும் மகிழ்சிறப்பே.

சிறப்புடை ஒன்பான் இரவினின் மூன்று திகழ்வடிவாய்
உறப்புடன் ஆவா கனம்புரிந் தேபூ சனைஉவப்பார்
அறச்செயல் கொண்டே நியதியாய் அந்நாள் அகர்த்தமர்த்தி
மறப்பிலார் பூசை புரிந்தார்க் கருளல் வரம்பிலையே.

வரம்பிலுன் பேர்பர விப்பன் மலர்தூய் வழுத்துநர்க்கே
நிரம்ப அருள்வதுன் நேர்மைஅ தன்றி நினைத்துநினைத்(து)
உரத்தள வேபூவு மற்றுமெல் லாமென ஓர்ந்துபோற்றக்
கரப்பிலா தாங்கவர் பூசையேற் றின்பிற் கலந்தவளே.

தவளத்த நீறணி சங்கரன் நீபரா சக்திநீயே
குவளைக்கண் நீயவற் குற்றதாய் அன்னுன் நினதமப்பன்
புவனத்தும் அண்டத்தும் நீரல்ல தில்லை புகல்நுமக்கே
சிவனென்ன வுஞ்சிவை பற்பல சக்தி சிவனுமாறே.

சிவனுவ தெவ்வுயிர் எப்பொருள் எவ்விடம் சேரநின்றே:
அவனுடன் நீயுமாய் நீரின் நெருப்பின் தணிவுவெம்மை
கவர்தர நிற்ப சரிப்ப எவற்றுங் கலந்தருள்வீர்
எவர்அதை ஓர்ந்தார் அவர்உரு ஞானத் திருவுருவே.

ஞானத்து ணின்முர் உலகின்ப துன்ப நனியுமோரார்
ஞானத்து ணிற்பார் சரியை கிரியை நவிலுயோக
மோனமுங் கைக்கொண் டநந்தம் விழியராய் முற்றுணர்வார்
ஆனந்த வாழ்வே பெறுவர் பெரும்பதம் ஆர்வரன்றே.

ஆர்வர்பே ரின்பம் அடிமலர் சூட அயன்விதிபோம்
ஆர்வலர் ஏத்தவே சிங்கம்ஆ ரோகணித் தங்குவந்தாள்
பேர்பல பாடினுர் கண்டார் இடியும் பெருமினலும்
நீருடை மேக நெடுநிலம் யாவும் நிலையுறவே.

நிலைகாண் பரிய பவக்கடல் வீழ்ந்தே நினைமறந்தார்
கலையுணர் தேருர் குருமொழி மேலதாய்க் காதிலோரார்
உலையின்வீழ் கீடமே என்னமாய்ந் தின்னும் உழல்வதற்கே
அலைவார் கடைத்தேற லென்றே என்மனம் ஆழ்கின்றதே.

ஆழப் புதைப்பார் அன்பும் அருளும் அமைகிலாதார்
ஆழப் புதைப்பார் அருமைப் பிறப்பை அடிமைசெய்யார்
ஆழப் புதைப்பார் அறிஞர் உரையும் அறநெறியும்
ஆழப் புதையா ரடிமல ருள்ளத் தறும்பிறப்பே ?

பிறப்பார் இறப்பார் பிணிக்குநோய் கொண்டறப் பேதமையால்
உறப்பா டறிந்தும் களைநெறி தேடார் ஒளிந்துடற்குள்
அறச்சூழ்ந் திருப்பார் எவர்?எத னுல்உடல் ஆட்டம்?என்றே
சிறக்கவே சிந்தியார் துர்க்கையே எந்நாள் திருந்துவாரே:

வார்கொண்ட பல்லா யிரகோடி அண்டத்தின் ஆட்டமெல்லாம்
ஏர்கொண்ட நீநின் வலப்பால் திகழ்சிவம் என்பதோரார்
நீர்எரி காற்றே நிலம்வான் எனத்தொடர் தத்துவங்கள்
நேர்கொண்ட ஆற்றல் அனைத்தப் பாலாய் நிறைபொருளே.

நிறைபொரு ளேஇக் குறையுடை யேற்குன் நினைவளித்தே
நிறைமனம் நேரத் திருச்சந் நிதிமுனம் நித்தமுற்றுக்
கறைமன மற்றுக் கழலடி பற்றிக் கரைபடர்தற்
கிறைமனங் கொண்டருள் தெல்லிதுர்க் காம்பா திரிபுரையே.

புரையற்ற நாற்பத்து நாற்கோண யந்திரப் பொன்னணங்கே!
விரையுற்ற மூன்றுறு பத்தினோ டைந்தும் மிசையொன்றுசேர்
கரையற்ற மந்திரத்துள்ளொளிர் சோதியே! கற்பகமே!
வரையற்ற அண்டத் துயிர்க்கெலாம் உய்வழி வாய்ப்பியன்னே.

அன்னையே அங்கயற் கண்ணியே நீயிங் கமர்ந்தநாளாய்
நின்னையே கண்டு செயசெய போற்றி நிமலியென்றே
உன்னையே நம்பும் அடியார்க் கருள்செய் துயச்செயல்போல்
பொன்னடி போற்றுந் தொழும்பரை யாட்கொள் பொலிகபூவே.

— நிறைவு —

## வாழ்த்து

அதிர்கடல் சூழுபார் சத்திநி பாத அமைவினுலே
கதிர்காமர் அன்னை திருவடி நீழல் கலந்துசூழ்ந்தே
முதிரன்பின் யந்திர தீர்த்தம் கொணுநம் முனைவினைபோக்
கிதமனி பேர்வாழ்க! ஏந்துசீர் அன்பர் இனிதுவாழ்க!

தெல்லிப் பழைவாழி! தேன்மலர் மூடுநின் சிற்றடிக்கே
மல்லற் றிருத்தொண்டின் மாநிலம் போற்ற மகிழ்ந்திடுவார்
செல்வச் செழிப்புந் திகழ்ஞான மோங்கச் செழித்திடலால்
அல்லற் பிறவி யினியெடார் நல்லரு ளார்ந்துவாழ்க!

## வேறு

இருப்பைந னீழலி லிருப்பைநி னெழில்வாழி!
ஏந்துசங் கஞ்சக்ரமும்
விருப்புற்ற தொண்டுபூண் பொறுப்பிற் குழுவினோர்
மேன்மைபல பெற்றுவாழி!
கருப்பை புகாவழி காணநி னடிமலர்
கருதுசிந் தையினர்வாழி!
திருப்பெரு தங்கமாம் சீரடிமை பூணுநின்
சிந்தையார் வாழி!வாழி!

திருநிறைவுறுக.

குகன் அச்சகம், தெல்லிப்பழை